செ.வெ.எண்: 4 4.1.09

**இணைய தளம் மூலம் பணம் செலுத்தும் வசதியை துவக்கி வைக்கும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றும் உரையின் வரைவு**

குறைந்த மின் அழுத்த, மின் இணைப்புகளுக்கு மின் கட்டணம் செலுத்திட மின் நுகர்வோர், மின் வாரிய அலுவலகங்களில் உள்ள வசூல்மையங்களுக்குச் சென்று மின் கட்டணம் செலுத்தும் முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனால் கடைசி நேரத்தில் மின்கட்டணம் செலுத்திட செல்லும் மின் நுகர்வோரின் கூட்டம் அதிகம் இருப்பதால் மின் நுகர்வோர் பணம் செலுத்துவதில், மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

இதனை கவனத்தில் கொண்ட மின்சார வாரியம், 01.04.2008 முதல் 24 மணி நேரமும் பணம் செலுத்திடும் வகையில் ATP – Any time Payment என்ற இயந்திரத்தை கனரா வங்கி உதவியுடன் சென்னையில் அறிமுகப்படுத்தியது. இதனை மின் நுகர்வோர் பெருவாரியாக பயன்படுத்தி வருகின்றனர். இதுவரை 35,189 மின்நுகர்வோர் இதன் மூலம் பயனடைந்து உள்ளனர்.

இதன் விரிவாக்கமாக 17.09.2008 முதல் மின்நுகர்வோர் வங்கி கடன் அட்டை (Credit Card) வங்கி பண அட்டை (Debit Card) மூலமாக பணம் செலுத்தும் வசதியினை ஆக்ஸிஸ் (AXIS) வங்கியின் உதவியுடன் அமுல்படுத்தியுள்ளது. மேலும் AXIS வங்கியில் கணக்குவைத்திருப்போர் “NET BANKING” மூலமாகவும் பணம் செலுத்தும் வசதியும் செய்யப்பட்டு மின்நுகர்வோர் பயனடைந்து வருகின்றனர். இவ்வகையில் பயனடைந்த மின்நுகர்வோர்களின் எண்ணிக்கை இதுவரை 12,512 ஆகும்.

இதனை மேலும் விரிவு படுத்தும் வகையில் மற்ற வங்கிகளும் இந்த சேவையில் பங்கு கொள்ளும் வகையில் இன்று முதல் 04.01.2009 முதல் ICICI வங்கியும், இந்தியன் (INDIAN) வங்கியும் இந்த சேவையில் தங்களை இணைத்துக் கொள்ள முன் வந்துள்ளன.

இதன்மூலம், கடன் அட்டை (Credit Card) பண அட்டை (Debit Card) வைத்திருப்போர் ICICI வங்கி மூலமாகவும் செலுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ICICIயில் வங்கி கணக்கு வைத்திருப்போர் NET BANKING மூலமாகவும் பணம் செலுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்தியன் வங்கியில் வங்கிக் கணக்கு வைத்திருப்போர் இந்தியன் வங்கி "NET BANKING" மூலமாகவும் மின் கட்டணம் செலுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

ஏனவே சென்னையிலுள்ள மின் நுகர்வோர் மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் சிரமங்களை மின்சார வாரியம் வெகுவாக குறைத்துள்ளது. இதன் மூலம் சென்னை வடக்கே கும்மிடிப்பூண்டி முதல் தெற்கே மரக்காணம் வரை உள்ள 28 இலட்சம் மின்நுகர்வோர்கள் பயன்பெறுவர்.

இந்த வசதிகள் தமிழகம் முழுவதும் உள்ள மின் நுகர்வோர் பயன்படுத்தும் வகையில், விரிவு படுத்திடும் முயற்சியில் மின்சார வாரியம் ஈடுபட்டு வருகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9